**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதியாருக்குப் பாரதி என்ற பட்டம் எப்பொழுது யாரால் வழங்கப்பட்டது ?
2. 'மலைக்கள்ளன்' நூலின் ஆசிரியர் யார்?
3. மணிக்கொடிக் கவிஞர்கள் இருவரை குறிப்பிடுக.
4. 'கவிக்கோ' என்று அழைக்கப்படுபவர் யார்?
5. 'நாய்க்குடை' என்னும் கவிதை எதைப்பற்றியது?
6. அப்துல் ரகுமான் 'ஹைக்கூ' கவிதை வடிவங்களை எந்த மொழியிலிருந்து அறிமுகப்படுத்தினார்?
7. கலம்பகத்தில் உள்ள உறுப்புகள் எத்தனை?
8. சரபேந்திர பூபாலக் குறவஞ்சியை இயற்றியவர் யார்?
9. 'வரைவு' என்பதன் பொருள் யாது ?
10. திருமாலின் கொப்புழில் தாமரை மலரில் தோன்றியவர் யார்?
11. பள்ளு இலக்கியத்தின் வேறு பெயர்கள் இரண்டினைக் கூறுக.
12. தக்கயாகப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?
13. அகப்பொருள் நூலுக்குரிய உத்திகள் இரண்டினை எழுதுக.
14. சரபேந்திரர் உலா வரும் வாகனம் எது?
15. அற்புதத் திருவந்தாதியின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கண்ணதாசனின் படைப்புகள் எவை?
2. மடல் ஏறுதல் என்றால் என்ன?
3. முக்கூடற்பள்ளு –பெயர்க் காரணம் தருக.
4. தக்கயாகப் பரணியிலுள்ள பரணி உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
5. தற்குறிப்பேற்ற அணியைச் சான்று தந்து விளக்குக.
6. படை வழக்கு என்றால் என்ன?
7. ஒன்பது வகைச் சுவைகள் எவை?
8. திருக்காவலூர் மக்களுக்கு நிலவு சுடுவதில்லை ஏன்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

**1.** (அ) புதுக்கவிதையின் வளர்ச்சியில் ந.பிச்சமூர்த்தியின் பங்களிப்பை தொகுத்து எழுதுக:

(அல்லது)

(ஆ) பாரதியாரின் பெண்ணிய சிந்தனை குறித்துக் கட்டுரை வரைக:–

2. (அ) பட்டுக்கோட்டையாரின் பொதுவுடைமைச் சிந்தனை குறித்து விவரி?

(அல்லது)

(ஆ) திருக்காவலூர்க் கலம்பக உறுப்புகள் பற்றி விளக்குக.

3. (அ) சிற்பியின் கவிதையிலுள்ள கற்பனை இலக்கிய அழகு உவமை, உருவகம் குறித்துத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பாவேந்தர் பிள்ளைத்தமிழ் இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

***